# கோட்டபாய ராஜபக்ச பதவியிலிருந்து போனாலும் பாவத்தின் நிழல் இந்த அரசை விட்டு போகவில்லை!

## மனோ கணேசன் எம்.பி. சுட்டிக்காட்டு




ராஜபக்சர்களின் அட்டூழியங்களை மன்னிக்க நாம் தயார் இல்லை. ஆகவே ஒரு கையால் ராஜபக்சர்களை கட்டி அணைத்தப்படி மறுகையால் எம்மை சுட்டி அழைக்க வேண்டாம். நாம் இன்று இருக்கும் இடத்தில் சௌக்கியமாக இருக்கிறோம்.

கோட்டபாய ராஜபக்ச போனாலும், அவரது பாவத்தின் நிழல் போகவில்லை. சட்டப்படி கோட்டபாய ராஜபக்ச 16ம் திகதி நவம்பர் 2019 தேர்தலில் பெற்ற மக்கள் ஆணையுடன்தான் இந்த அரசு நடக்கிறது. அந்தப் பாவத்தில் எமக்கு பங்கு வேண்டாம், என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

நாட்டில் உருவாகிவரும் புதிய கூட்டணிகளிடமிருந்து தமது அணியை நோக்கி வரும் அழைப்புகள் பற்றி, தென்கொழும்பு கட்சி அலுவலகத்தில் நடத்திய ஊடகச் சந்திப்பில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். 2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 17 புதன்கிழமை 31.01.2024 கதிர் 169




# மின் விளக்குகளின் செயற்பாடின்மையால் சட்டவிரோதச் செயல்கள் அதிகரித்துள்ளன!

## கரைச்சி மக்கள் அமைச்சரிடம் முறையீடு



பிரதேச சபையால் பொருத்தப்பட்ட வீதி மின்விளக்குகள் தரமற்றவை எனவும், சட்ட விரோத செயற்பாடுகளுக்கு அவையும் காரணம் எனவும் பிரதேச மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முறையிட்டுள்ளனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் இன்று இடம்பெற்ற கரைச்சி பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் இவ்வாறு பிரதேச மக்களால் அமைச்சரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 2 ➤

# ஜனாதிபதியின் இல்லம் எரிப்பு சந்தேக நபர்களுக்கு பிடியாணை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு சொந்த மான கொள்ளுப்பிட்டியில் உள்ள தனியார் வீடு எரிக்கப்பட்ட சம்பவத்தின் சிசிடிவி மற்றும் காணொளி காட்சிகளை நீதிமன்றில் முன்னிலைப் படுத்துமாறு இன்று கோட்டை நீதவான் திலின கமகே குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் ஆஜராகாத மற்றும் பிணையில் விடுவிக்கப்பட்ட சந்தேகநபர்கள் நான்கு பேருக்கும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

# யாழ் சிறையிலிருந்து விடுதலையான இளைஞர் சில தினங்களில் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்ட இளைஞரொருவர் சில தினங்களில் வீட்டில் உயிரிழந்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூர் அரசடி பகுதியை சேர்ந்த 28 வயதான கணேஷ் நிஷாந்தன் என்பவரே நேற்று உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. உடற்கூறுப் பரிசோதனைக்கு பின்னரே உயிரிழப்புக்கான காரணம் தெரியவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 26 ஆம் திகதி குறித்த இளைஞர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# இலங்கையின் சுதந்திர தினத்தில் கரிநாள் பேரணி! யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4 ஆம் திகதி கிளிநொச்சி இரணைமடு சந்தியிலிருந்து டிப்போச் சந்தி வரை நடைபெறும் கரிநாள் பேரணியை மேற்கொள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், பிரித்தானிய காலனித்துவத்தின் பிடியிலிருந்து சிறிலங்கா, 04.02.1948 ஆம் ஆண்டு விடுதலை பெற்றநாள் தமிழ்த் தேசிய இனம் திறந்த வெளி சிறையில் இடப்பட்ட நாள். ஒட்டுமொத்த நாட்டினுடைய இறைமை, ஆட்சியதிகாரம் அனைத்தும் தனித்தே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கைகளிலே ஒப்படைக்கப்பட்டமை என்பது தமிழினம் மீதான தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளிற்கே 2 ➤

# கந்தரோடைக் கொலைச் சம்பவம் பொலிசார் இன்று விசாரணை



யாழ்ப்பாணம் - சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் நேற்றைய தினம் கொலைச் சம்பவம் நடந்த பகுதியில் மல்லாகம் நீதவான், சுன்னாகம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் இணைந்து இன்று விசாரணைகளை மேற்கொண்டனர். நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை இருவரிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கொலையில் முடிவடைந்துள்ளது. 2 ➤

# தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி இறக்குமதி வாக்குமூலம் அளிக்க வராத கெஹெலிய ரம்புக்வெல

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்த விவகாரம் தொடர்பாக வாக்குமூலம் பெற்றுக் கொள்வதற்காக முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அவர் இன்று முன்னிலையாகவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை இலங்கைக்கு இறக்குமதி செய்வதமை தொடர்பாக வாக்குமூலத்தைப் பெறுவதற்காக முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்

இதேநேரம் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க இன்று காலை குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு சென்றிருந்த நிலையில் அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உட்பட மருந்து மோசடிக்கு காரணமான அனைத்து தரப்பினரையும் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு ஜனாதிபதியின் தலையீடு அவசியம் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (04)

# ஊழல் உள்ள நாடுகள் பட்டியல் இலங்கைக்கு 115 ஆவது இடம்!

உலகில் ஊழல் நடைபெறும் நாடுகள் கொண்ட பட்டியலை அரசு சாரா அமைப்பான "டிரான்ஸ்பரன்சி இன்டநஷனல்" என்ற அமைப்பு வெளியிட்டு வருகிறது.

உலகில் உள்ள 180 நாடுகளில் இந்த அமைப்பு ஆய்வு மேற்கொண்டு வரிசைப்படுத்துகிறது. நிர்வாக வெளிப்படைத்தன்மை, இலஞ்சம், ஊழல் மற்றும் முறைகேடுகள் போன்றவற்றை காரணிகளாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

பாகிஸ்தான் இந்தப் பட்டியலில் 133 ஆவது இடத்தையும், இலங்கை 115 ஆவது இடத்தையும் சீனா 76 ஆவது இடத்தையும் பிடித்துள்ளன. குறைந்தபட்சமான 11 மதிப்பெண்களுடன் சோமாலியா நாடு கடைசி இடத்தில் உள்ளது.

## கந்தரோடைக் கொலைச் சம்பவம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முரண்பாட்டில் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியைச் சேர்ந்த சந்திரநாதன் கோபிராஜ் (வயது 36) என்பவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சுன்னாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த போது, அயலவர்களான உறவினர்கள் இருவருக்கும் இடையில் கோழி வளர்ப்பினால் பிரச்சனைகள் நிலவி வந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் நேற்றைய தினமும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது முற்றி கத்திக்குத்தில் முடிவடைந்துள்ளது.

அதில் கத்திக்குத்துக்கு இலக்கான நபர் உயிரிழந்ததை அடுத்து , கொலைச் சந்தேகநபரான 57 வயதுடைய அயலவர் கைது செய்யப்பட்டள்ளார்.

கைது செய்யப்பட்டவரை சுன்னாகம் பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர். (01)

## இலங்கையின் சுதந்திர தினத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிகோலியது என்பதோடு. 2009 ஆண்டு இனப்படுகொலை எனும் கோரமுகமாய் வெளிப்பட்டதென்பதும் யாவரும் அறிந்ததொன்றே.

சிறிலங்காவின் சுதந்திரத்திற்கு முன்னர் இருந்தே தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பென்பது சிங்கள குடியேற்றத்திட்டங்கள், இராணுவமயமாக்கம் முதற்கொண்டு தொடங்கிய இனவழிப்புச் செயன்முறை, 2009 ஆண்டு ஈழப்போர் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழர் தாயகத்தை சூறையாடுவதில் மேலும் தீவிர நிலை கொண்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழலில் பெப்ரவரி 04, 2024 ஐ கறுப்புநாளாக பிரகடனப்படுத்தி, பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து கறுப்புதினப் பேரணியினை முன்னெடுக்க அழைப்பு விடுக்கின்றோம்.

1. வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதோடு, தமிழர் தாயகத்தின் மீதான திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் உள்ளிட்ட ஆக்கிரமிப்புக்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும். குறிப்பாக தற்போது கையறு நிலையில் உள்ள கிழக்கு மாகாணம் மீதான ஆக்கிரமிப்புக்கள் தாமதமேதுமின்றி முடிவுக்கு கொண்டு வரப்படவும் வேண்டும்.

2. ஈழத்தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்கும் வழிநடத்துவதற்கும் சுயநிர்ணய உரிமை உடையவர்களாவர் என்பதை ஏற்று ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

3. தமிழ் மக்களிற்கான அரசியற்தீர்வு தொடர்பான முயற்சிகள் யாவும் திம்புக் கோட்பாட்டினை அடியொற்றியே முன்னெடுக்கப்பட வேண்டும். சிறிலங்கா ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்குட்பட்ட பதின்மூன்றாம் திருத்தத்தினை முற்றாக நிராகரிக்கின்றோம்.

4. தமிழர் தாயகத்தில் முடிவற்றுத் தொடரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், இராணுவப் பிரசன்னம், சிங்கள - பௌத்தமயமாக்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி, தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை போன்றவற்றிற்கான உரிய தீர்வுகள் தாமதமேதுமின்றி வழங்கப்பட வேண்டும் என்பதோடு, ஆக்கிரமிப்புக்களை முன்னின்று நடாத்தும் அரச இயந்திரத்தையும் அதன் நிறுவனங்களையும் கண்டிக்கின்றோம்.

தமிழர் தேசத்தின் மீது நூற்றாண்டு கடந்தும் சூழ்ந்துள்ள பேரினவாதத்தீயிலிருந்து தமிழர் தாயகத்தை காத்திடவும், தலைமுறைகள் தாண்டிய இனத்தின் இருப்பிற்காகவும் எதிர்வரும் பெப்ரவரி 4, 2024 ஆம்நாள் கிளிநொச்சி இரணைமடு சந்தியிலிருந்து டிப்போச் சந்திவரை நடைபெறும் கரிநாள் பேரணியில் பங்குகொள்ள உணர்வுடனும் உரிமையுடனும் அழைத்து நிற்கின்றோம் - என்றுள்ளது. (01)

## மின் விளக்குகளின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிதாக கரைச்சி பிரதேச செயலாளராக பொறுப்பேற்ற ரி.முகுந்தன் அமைச்சரை வரவேற்றதைத் தொடர்ந்து மாநாட்டு மண்டபத்தில் கூட்டம் ஆரம்பமானது. குறித்த கூட்டத்தின் தலைமை உரையை அமைச்சர் நிகழ்த்தியதையடுத்து திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

குறித்த கூட்டத்தில் திணைக்கள தலைவர்கள், கிராம சேவையாளர்கள், கிராம மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிலையில், அமைச்சரைச் சந்தித்த பொது மக்கள் பிரதிநிதிகள் தமது குறைபாடுகளை அவரிடம் எடுத்துரைத்தனர்.

பிரதேச சபையால் கிராமத்தில் முக்கிய பகுதிகளில் வீதி மின் விளக்குகள் அமைக்கப்பட்டன. ஆயினும், அவை குறுகிய காலங்களில் ஒளிராமல் பழுதடைந்துள்ளன. தரமான மின்விளக்குகளிற்கு உத்தேச அளவீடு மேற்கொண்டு நிதி ஒதுக்கி பின்னர் தரமற்ற மின்விளக்குகளை பொருத்தியுள்ளார்களெனச் சந்தேகிக்கிறோம்.

இதற்கு நிரந்தரமான தீர்வு வேண்டும். முக்கிய இடங்களில் மின்விளக்குகள் இவ்வாறு எரியாமையால் குற்ற செயல்களும். வாள்வெட்டுச் சம்பவங்களும் நடக்கின்றன. அண்மையில் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றி சென்ற பேருந்து மறிக்கப்பட்டு வாள்வெட்டு இடம்பெற்றது. இவ்வாறான குற்றச் செயல்கள் அண்மையில் அதிகரித்துள்ளன.

முன்னர் கிராமத்துக்குப் பொறுப்பாக பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்த போது குற்றச் செயல்கள் குறைவாக இருந்தன. மதுபானங்களின் விலை அதிகரிப்பினால் சட்டவிரோத மது உற்பத்தி அதிகரித்துள்ளது. கசிப்பினை அருந்திய நபர் ஒருவர் நீண்ட காலமாக சுயநினைவிழந்த நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். இதனால் சுகாதாரத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி அவ்வாறானவர்களுக்கு வீணாக செலவு செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோத கசிப்பினை கட்டுப்படுத்தாமையினால் அரச நிதி இன்னொரு விதமாக வீணான மருத்துவ ரீதியில் செலவாகின்றது. இவ்வாறன விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும், என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் கிராமங்களுக்கிடையிலான சந்திப்புக்கள் மூலம் தீர்வு காணத் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (02)

## கோட்டபாய ராஜபக்ச ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முதல் நாள் அறிவிக்கப்பட்ட புதிய கூட்டணி நண்பர்கள் என்னுடன் பேசிய போது தெளிவாக ஒன்றை சொன்னேன். ஒரு கையால் ராஜபக்சர்களை கட்டி அணைத்தப்படி மறுகையால் எம்மை சுட்டி அழைக்க வேண்டாம் என்று சொன்னேன். நாம் இன்று இருக்கும், ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற இடத்தில் நாம் சௌகரியமாகவே இருக்கிறோம் எனவும் சொன்னேன்.

தமிழ் முற்போக்கு கூட்டணி நினைத்து இருந்தால், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆகிய அடுத்த நாளே அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கலாம். ஆனால், அதை நாம் செய்யவில்லை. ஏனென்றால் பேரினவாதம், ஊழல் ஆகிய இரண்டு பேரழிவுகளுக்கும் ஏகபோக உரிமையாளர்களான ராஜபக்சர்களுடன் கலப்பு கல்யாணம் செய்ய தமிழ் முற்போக்கு கூட்டணி தயார் இல்லை. எங்கள் இந்த கொள்கை நிலைப்பாடு காரணமாகத்தான் நாம் இன்று ராஜபக்ச ஆதரவு ரணில் அரசாங்கத்தில் இடம்பெறவில்லை.

இன்று இந்த ராஜபக்ச ஆதரவு ரணில் அரசில் அங்கம் வகிப்பவர்கள், தாம் ஏதோ வெட்டி முறித்து விட்டதாக தப்புக் கணக்குப் போட்டுவிடக்கூடாது. நாம் அங்கே கொள்கை நிலைப்பாடு காரணமாகவே இல்லை. ஆகவேதான் நீங்கள் அங்கே இருக்கிறீர்கள். அதுதான் உண்மை. சட்டப்படி கோட்டபாய ராஜபக்ச 16ம் திகதி நவம்பர் 2019 தேர்தலில் பெற்ற மக்கள் ஆணையுடன்தான் இன்றுவரை இந்த அரசு தொடர்கிறது. அந்த பாவத்தின் நிழலில் அங்கமான உங்களுக்கு பாவத்தின் சம்பளம் அடுத்த தேர்தலில் கிடைக்கும்.

16ம் திகதி நவம்பர் 2019 முதல் இன்றுவரை, நான்கு வருடங்கள், இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. கடந்த நான்கு வருடங்களாக இந்த அரசாங்கத்தின் பதவிகளில் இருக்கின்ற தமிழ் அரசியல்வாதிகளிடம், நீங்கள் இதுவரை வெட்டி முறித்த சாதனைகளை முடியுமானால் பட்டியல் இடுங்கள் என பகிரங்க சவால் விடுகிறேன்.

அபிவிருத்தி செய்ய நிதி இல்லை என்பீர்கள். சரி, அபிவிருத்தியை விடுங்கள். அரச நிர்வாக ரீதியாக தமிழ் மக்கள் தொடர்பில் நீங்கள் அமைச்சர்களாக, துணை அமைச்சர்களாக, அரசாங்க எம்பிக்களாக இதுவரை என்ன செய்து கிழித்துள்ளீர்கள் என பகிரங்கமாக சொல்லுங்கள்? வேண்டுமானால், நாம் ஆட்சியில் இருந்த நான்கு ஆண்டுகளில் நாம் செய்த சாதனைகளையும், இன்று நீங்கள் இந்த நான்கு ஆண்டுகளில் செய்யத் தவறிய சீர்படுத்தல்களையும் நான் பகிரங்கமாக பட்டியல் இடுகிறேன்.

எனவேதான், இந்த புதிய, பழைய பாவங்களின் கூட்டணியில் நாம் இல்லை. நாங்கள் சோரமும் போகவில்லை. பாவமும் செய்யவில்லை. ஆகவே இந்த பாவத்தின் சம்பளம் எமக்கு கிடையாது. எனவே தமிழ் முற்போக்கு கூட்டணி என்ற முற்போக்கு அரசியல் இயக்கம், அடுத்து வரும் புதிய அரசாங்கத்தில், புதிய பலத்துடன், நேர்மையாக அங்கம் வகிக்கும் - என்றும் மனோ கணேசன் எம்.பி. குறிப்பிட்டுள்ளார். (04)





செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



## கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் சேவை பாராட்டு கௌரவிப்பு நிகழ்வு

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தால் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி மூ. கோபாலரெத்தினம் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வு கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் தலைவர் பொறியியலாளர் லயன் எம். சுதர்சன் தலைமையில் அம்பாறை வீதி அபிவிருத்தி திணைக்கள சுற்றுலா விடுதியில் கடந்த (28) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் லயன் பரமலிங்கம் இராசமோகன் ஏற்பாட்டில் இப்பாராட்டு விழா இடம்பெற்றது.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி காணி அபிவிருத்தி திறன் விருத்தி மகளிர் அபிவிருத்தி நீர் விநியோக துறை அமைச்சின் செயலாளராக லயன் கலாநிதி மூ.கோபாலரத்தினம் (மூகோ) இதன் போது பொன்னாடை போர்க்கப்பட்டு பாராட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். செயலாளர் லயன் பாயிஸ் நன்றியுரையாற்றினார்.

## மொறவெவ பிரதேச செயலகத்தில் பால்மா பொதிகள் வழங்கப்பட்டன



(ஹஸ்பர்.ஏ.எச்)

திருகோணமலை மாவட்டம் மொறவெவ பிரதேச செயலகத்தில் பால் மாப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பன்குளம் இராணுவ அதிகாரி லெ. கேனல்.பிலிமத்தலாவேயின் அனுசரணையுடன் பிரதிப்பணிப்பாளர் (திட்டமிடல்) ம.துஷ்யந்தனின் வழிகாட்டலுக்கிணங்க பிரதேச செயலாளர் ஆ.நடேஸ்வரன் தலைமையில் மொறவெவ பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான பால்மா பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வானது நேற்று (30) பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

பிள்ளைகளின் ஊட்டச் சத்தை அதிகரிக்கவும் ஆரோக்கியமான உடல் உள வளர்ச்சிக்கு ஒரு உறுதுணையாகவும் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிகழ்வில் மொறவெவ உதவி பிரதேச செயலாளர் கே.சத்தியப்ரியா, மொறவெவ பிரதேச செயலக கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் 8ஆம் திகதி நடமாடும் சேவை




(ஹஸ்பர் ஏ.எச்)

பிறப்பு, இறப்பு மற்றும் திருமண பதிவுகள் தொடர்பான நடமாடும் சேவை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கமைய "புதிய கிராமம்- புதியநாடு" எனும் தொனிப் பொருளின் கீழ் இடம்பெறவுள்ள இவ் நடமாடும் சேவையானது பெப்ரவரி 8 ஆந் திகதி அன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை இடம் பெறவுள்ளது.

இதில் பிறப்பு, இறப்பு, திருமண பதிவுச் சான்றிதழ்கள் இல்லாதவர்களுக்காக சான்றிதழ்களை பெற்றுக் கொடுத்தல் மற்றும் தேசிய அடையாள அட்டைச் சிக்கல்களைத் தீர்த்தல், காணிப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெறல் என பல சேவைகளை பொது மக்கள் அன்றைய தினம் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



## மிதி வெடி

*எல்லாரும் எப்பிடி இருக்கிறியள்? நலமா இருப்பியள் எண்டு நம்புறன். நம்பிக்கை தானே வாழ்க்கை பாருங்கோ....!*

*போன கிழமை மிதிவெடியில ரெண்டு எஸ்.எம் மார் பற்றி எழுதினதுக்கு ஏகப்பட்ட கோல்..! தமிரசுக்கட்சியில நடக்கிற குத்து வெட்டுகள் எத்தினையோ இருக்குது நீங்கள் ஒண்டையும் சொல்லேல்ல எண்டு கனபேர் குறைப்பட்டுக் கொண்டிச்சினம்....*

*உதில சொல்லுறதுக்கு ஒண்டும் இல்லப் பாருங்கோ..... எனக்கு பாட்டு ஒண்டு தான் ஞாபகம் வருகுது... "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே கண்ணா..... ஆசை எனும்....."*

*பக்கத்து வீட்டுக்காரர் ஆட்டுகிற போல எல்லாரும் ஆடுகினம்.... நாம நம்மட பாட்டில இருப்பம் : நடக்கிறதைக் கண்டு கொள்ளுவம். ஆக மொத்தம் ஆகப் போறது ஒண்டுமில்லப் பாருங்கோ......! சும்மா இருக்கிற "குமார் அன் கோ" நல்ல வடிவா "ஸ்கோர்" பண்ணப் போகுது அவ்வளவும் தான்.*

*இதைத் தான் என்னுடைய சிங்களச் சிநேகிதம் ஒண்டு அப்ப தொடக்கம் சொல்லுறது... "எங்கட சிங்களத் தலைமையளுக்கு மண்டேக்குள்ள ஒண்டுமில்லை. தமிழனுக்குத் தனி நாட்டைப் பிரிச்சுக் குடுத்திருந்தா தனக்குள்ள அடிபட்டே முடிஞ்சிருப்பானுகள்" எண்டு அடிக்கடி சொல்லுறவன். எவ்வளவு சரியாப் போச்சுது பாருங்கோ.... ஒரு கட்சிய ஒற்றுமையா நடத்தக் காணேல்ல இதுக்குள்ள தனிநாடு பிடிச்சுத் தமிழரசு நடத்தப் போகினமாம்.....! எப்ப அவர் இல்லை எண்டு ஆச்சுதோ... அண்டையோட எல்லாம் முடிஞ்சுது... உதை விடுங்கோ... நாங்கள் இங்கத்தைக் குட்டி நாட்டாமை மாரைப் பற்றிக் கொஞ்ச நாளைக்குக் கதைப்பம்.*

*உவர் ஒரு நாட்டாமை... அகிலமெலாம் ஆளும் அதிகாரமுள்ளவர்... இங்க ஒரு பிரதேசத்துக்குச் செயலாளரா இருக்கிறார். கொக்குவிலில இருந்து பூநகரிக்குத் தினமும் ஒதுக்கப்பட்ட வாகனத்தில வந்து போறவர். அப்பிடி இருந்தும் சொந்த இடத்துக்குப் பக்கத்தில மாற்றம் வேணும் எண்டு அடம்பிடிச்சுக் கொண்டிருந்தவர். தனக்கு இடமாற்றம் வந்தால் தான் அங்க இருக்கிற சின்னன் - பொன்னனுகளையும் போக விடுவன் எண்டு சொல்லி மினிஸ்ரியில இருந்து இடமாற்றம் வந்தவையளையும் மறிச்சு வைச்சு தானும் போகாமல் இப்ப மாட்டுப்பட்டுப் போய் முளிச்சுக் கொண்டிருக்கிறார்.*

*"அகில" மும் ஆள்பவரிடம் "தரணி" ஆளும் பெடியன் ஒருத்தன் மூண்டு வருசமா மாட்டுப்பட்டு மீள முடியாமல் இருந்த கதை தான் இது. அகிலத்தின் அலுவலகத்தில இடர் துடைக்கிற வேலைக்கெண்டு வந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருத்தர். பொதுப் போக்குவரத்தில தினமும் பயணம் செய்து சங்கானையிலயும், வேலணையிலுமா இருந்து கொண்டு இங்க வாறவர். பாதுகாப்பு அமைச்சுக் கீழ் வேலை செய்யுறார். அங்க, இங்க எண்டு அலைஞ்சு திரிஞ்சு ஒருமாதிரி ட்ரான்ஸ்பர் எடுத்துப் போட்டார். போனவருசம் டிசெம்பர் மாசத்தோட அவரைப் பூநகரியில இருந்து வேலணைக்கு மாத்தி கடிதம் அனுப்பப்பட்டிருக்கு.*

*அந்த உத்தியோகத்தர் ட்ரான்ஸ்பர் கேக்கேக்க ரெக்கமன்ற் பண்ணி அனுப்பிய அதிகாரி, அவரை விடுவிப்பன் எண்டு சொல்லித் தானே அப்ளிக்கேசனை போர்வோட் பண்ணிணவர்? இதுக்குப் பிறகு டிசெம்பர் மாதம் வந்த கடிதத்தை ஒருத்தருக்கும் தெரியாமல் ஒளிச்சு வைச்சுட்டார். ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு வாற கடிதத்தையே ஒளிச்சு வைக்கிறவையள் உப்பிடி எத்தினை விசியத்தைப் பொதுமக்களுக்குத் தெரியாமல் ஒளிச்சிருப்பினம்?*

*அரசாங்கத் தாபன விதிக் கோவையின் படி, இடமாற்றம் குடுக்கப்பட்டால், அவர் போகாமலும் விட ஏலாது, போறவரைத் தடுக்கவும் ஏலாது பாருங்கோ....*

*என்ன அங்கை முணுமுணுப்பு? அப்ப எப்பிடி மாநகரத்தில இருக்கிறவர் மட்டும் எப்பிடிப் போகாமல் விடுறார் எண்டு தானே கேக்கிறியள்... விளங்குது.... விளங்குது.... அவர் தனக்கு மாற்றம் வந்த ஏழு தரமும் ஒவ்வொருத்தராப் போய்க் காலில விழுந்து - வாலைப் பிடிச்சு இரத்துச் செய்து போட்டுத் தான் நிக்கிறார்.*

*இங்க அப்பிடியில்லை. அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு மாற்றத்தைக் கொடுத்த அனர்த்த முகாமைத்துவ நிலையம் (பாதுகாப்பு அமைச்சு) அவரின்ர சம்பளப் பட்டியலைக் கிளிநொச்சி மாவட்டத்தில இருந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மாத்திப் போட்டுது. பாதுகாப்பு அமைச்சு என்ன பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு மாதிரியே? எல்லாம் அப் ரு டேற்.*

*ஜனவரி மாசம் பேசீற்றில இருக்கிற ஒருத்தருக்குச் சம்பளம் போயிருக்குது... ஆனால் அப்பிடியொராள் வேலைக்கே வரேல்ல எண்டு வேலணை ஆக்களும், யாழ்ப்பாணக் கச்சேரி காரருமா மண்டையப் போட்டு உடைச்சிருக்கினம். இப்ப குடுத்த சம்பளத்துக்கு ஆர் - எப்பிடிக் கணக்குக் காட்டுறது?*

*விசியம் பெரிசாகி வெடிச்சதுக்குப் பிறகு தான் அகிலம் வாய் திறந்திருக்குது.... "எனக்கும் மாற்றம் வர - உன்னையும் றிலீஸ் பண்ணிற்றுப் போவம் எண்டு இருந்தனான்" எண்டு இந்த டீ.ஓ வின்ர காலில போய் விழுந்திருக்கிறார் எங்கட டீ.எஸ்.*

*சரி, இது தான் பிரச்சினை எண்டு கண்டு பிடிச்சாச்சு... இப்ப பூனைக்கு ஆர் மணி கட்டுறது?*

*டீ.எஸ். கடிதத்தைக் காட்டாமல் ஒளிச்சு வைச்சதால தான் வேலணைக்கு வேலைக்குப் போக வேண்டிய தம்பி, பூநகரியில இருந்ததெண்டு ஜீ. ஏக்கு ஆர் சொல்லுறது?*

*ஒரு மாதிரி அந்தப் பெடியனையே விட்டு கிளிநொச்சியில இருக்கிற அதிகார அம்மணிக்குப் போய் விசியம் சொல்லுப்பட்டிருக்கு. இப்ப அந்தப் பெடிக்கு "இமீடியற் றிலீஸ்".*

*அப்ப உத்தியோக பூர்வக் கடிதத்தை ஒளிச்சு வைச்சவருக்கு? பொறுங்கோ பொறுங்கோ... விசாரணை முடியட்டும் சொல்லுறன். கொக்குவிலுக்குப் பக்கத்தில கொக்குச் சுட நினைச்சவருக்கு கொஞ்சக் காலத்துக்கு விமோசனம் இல்லைப் போல கிடக்கு.... அவற்ர "ட்ரான்ஸ்பர் கான்சல்" எண்டு கதைக்கிறாங்கள்....!*

*மண்டைய மறைச்சவருக்குக் கொண்டைய மறைக்கத் தெரியேல்லப் பாருங்கோ.....!*

*-நரமுனி-*

# கருக்கலைப்பை மகளிர் உரிமையாக உறுதிப்படுத்தல் பிரான்ஸ் தேசிய அவையில் சட்ட முன்வரைவு வந்தது!




பிரான்ஸ் அரசியலமைப்புச் சட்டத்திலேயே கருக் கலைப்பை மகளிர் உரிமையாக உறுதிப்படுத்தும் சட்ட முன்வரைவு, பிரான்ஸ் தேசிய அவையில் (நாடாளு மன்றம்) நேற்று செவ்வாய்க்கிழமை எடுத்துக்கொள் ளப்பட்டது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கருக்கலைப்பு உரி மைகள் திரும்பப் பெறப்பட்டதைத் தொடர்ந்து, இதை அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெறச் செய்வதாக பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோன் உறுதியளித் திருந்தார்.

பிரான்ஸ் அரசியலமைப்புச் சட்டத்தில் 34 ஆவது பிரிவில் மகளிருக்கான கருக்கலைப்பு உரிமையை இடம் பெறச் செய்யும் வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று மக்ரோன் அரசு கருதுகிறது.

இத்தகைய திருத்தம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தனிச் சிறப்பு அமர்விலும் நிறைவேற்றப் பட வேண்டும். இந்தத் திருத்தத்துக்கு ஆதரவாகவே தேசிய அவை வாக்களிக்கும்.

பிரான்ஸின் பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் இந்த முடிவுக்கு ஆதரவாக இருக்கும் நிலையில் திருத்தம் எளிதில் நிறைவேற்றப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகி றது. அமெரிக்காவின் முடிவைத் தனித்தவொன்றாகக் கருத முடியாது. இந்தப் போக்கு பரவக்கூடிய நிலையில் இத்தகைய சட்டத் திருத்தம் அவசியம் என்றும் முன் வரைவின் அறிமுகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# இந்தியா குறித்து சர்ச்சைக்குரிய கருத்துப் பகிர்வு மாலைதீவு அதிபர் மன்னிப்புக்கோர வலியுறுத்து

இந்தியா குறித்து சர்ச்சைக்குரிய கருத்துகளைத் தெரிவித்தது தொடர்பாக மாலைதீவு அதிபர் முகமட் மூயிஸ் மன்னிப்பு கோர வேண்டும் என ஜும்ஹுரி கட்சித் தலைவர் காசிம் இப்ராஹிம் வலியுறுத்தியுள்ளார்.

அதிபர் மூயிஸ் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த 3 அமைச்சர்கள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி குறித்து சர்ச்சைக்குரிய கருத்துகளை சமூகவலைத் தளத்தில் இந்த மாதத் தொடக்கத்தில் வெளியிட்டனர். இதைத் தொடர்ந்து, இந்தியா-மாலைதீவு நாடுகளுக்கு இடையேயான தூதரக உறவு பாதிப்படைந்தது.

தனது சீன பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய அதிபர் மூயிஸ், ஊடக மொன்றுக்கு நேர் காணல் அளித்திருந்தார். அதில், மாலைதீவு மீது அதி காரம் செலுத்த எந்தவொரு நாட்டையும் அனுமதிக்க மாட்டோம், என இந்தியாவை மறைமுகமாகக் குறிப் பிட்டு அவர் பேசியிருந்தார்.

அதிபர் மூயிஸ் தலைமையிலான அரசின் இந்தி யாவுக்கு எதிரான நிலைப்பாடு தொடர்பாக மாலைதீவு ஜனநாயக கட்சி உள்பட சில கட்சிகள் கவலை தெரிவித் திருந்தன.

இந்நிலையில், நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய ஜும்ஹுரி கட்சித் தலைவர் காசிம் இப்ராஹிம், ‘அதிபர் மூயிஸ் அண்மையில் அளித்த நேர்காணல் ஒன்றில் இந்தியா குறித்து சர்ச்சைக்குரிய கருத்துகளைத் தெரிவித்திருந்தார். இதற்காக இந்தி யாவிடமும் அந்நாட்டு பிரதமர் மோடியிடமும் அவர் மன்னிப்பு கோர வேண்டும்.

மருந்துப் பொருள்களை இந்தியாவிலிருந்து இறக்கு மதி செய்வதை நிறுத்திவிட்டு, ஐரோப்பா, அமெரிக்கா போன்ற பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய மூயிஸ் முடிவெடுத்துள்ளார். மருந்துப் பொருள்கள் துறையில் இந்தியா முதன்மை இடத்தில் உள்ளது. ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. எனவே, இந் திய இறக்குமதியை ரத்து செய்யக் கூடாது. முறையான மன்னிப்பு கோரி இருதரப்பு உறவை சரிசெய்ய நட வடிக்கை எடுக்க வேண்டும்’ என்றார்.

அதிபர் மூயிஸை பதவி நீக்கம் செய்ய நாடாளு மன்றத்தில் பெரும்பான்மை வகிக்கும் முக்கிய எதிர்க் கட்சியான மாலைதீவு ஜனநாயக கட்சி, மற்றொரு எதிர்க்கட்சியான ஜனநாயகவாதிகள் கட்சி ஆகியவை திட்டமிட்டுள்ளன.

மொத்தம் 87 உறுப்பினர்களைக் கொண்ட மாலை தீவு நாடாளுமன்றத்தில், அதிபரை பதவி நீக்கம் செய் வதற்கான நடைமுறையை எளிதாக்கும் வகையில் விதி கள் அண்மையில் திருத்தப்பட்டன. அந்த விதிகளின் அடிப்படையில், 56 வாக்குகள் கொண்டு அதிபரைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

அதன்படி, அதிபருக்கு எதிரான பதவி நீக்கத்துக்கு மாலைதீவு ஜனநாயக கட்சியின் 43 எம்.பி.க்கள் மற் றும் ஜனநாயகவாதிகள் கட்சியின் 13 எம்.பி.க்கள் என மொத்தம் 56 உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது.

இந்நிலையில், இந்தத் திருத்த விதிகளை எதிர்த்து சட்டமா அதிபர் அலுவலகம் உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)




# கூகுள் குறுஞ்செய்திக்கான பார்ட் செயலியில் உங்கள் உரையாடல்கள் கண்காணிக்கப்படும்!




கூகுள் தனது குறுஞ்செய்தி செயலியான ‘கூகுள் மெசேஜஸ்’ (Google Messages) இல் தற்போது தனது செய் யறிவு தொழில்நுட்பமான பார்டை (Bard) இணைக்கும் முயற்சியில் உள்ளது. அதன் பீற்றா வடிவங்களை குறிப் பிட்ட பயனாளர்களுக்கு அனுமதித்து சோதனையும் செய்துவருகிறது.

இந்நிலையில், அந்த புதிய செய்யறிவு அம்சம் கொண்ட குறுஞ்செய்தி செயலி உங்களது உரையாடல் களை கவனிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீங்கள் யாருடன் என்ன பேசுகிறீர்கள்? எப்படி பேசு கிறீர்கள்? நீங்கள் பேசுபவருடனான உங்களது உறவு என்ன? நீங்கள் அதிகம் பயன்படுத்தும் வார்த்தைகள் என்னென்ன? எங்கு எப்படி பேசுவீர்கள்? அதாவது அலுவலகத்தில் இருந்தால் எப்படி பேசுகிறீர்கள், வீட்டி லிருந்தால் எப்படி பேசுவீர்கள் என்பதையும் கண் காணிக்கும் எனக் கூறப்படுகிறது.

இந்த செயலியின் பீற்றா வடிவில், உள்ளே செல்ல வும் கேட்கப்படும் அனுமதிகளும், அளிக்கப்படும் முன் னறிவிப்புகளும் – “உங்கள் தனிப்பட்ட விபரங்களை நாங்கள் பார்ப்போம்!” என சுற்றி வளைத்துச் சொல்வது போல் உள்ளது.

அதுமட்டுமன்றி, கண்காணிக்கப்படும் எழுத்து வடிவிலான உரையாடல் விவரங்கள் மற்ற சேவைக ளுக்கும் பயன்படுத்திக்கொள்ளப்படும் எனவும் குறிப்பி டப்பட்டுள்ளது. இந்த செயலியில் உள்ள செய்யறிவு, இந்த விவரங்களைக் கண்காணித்து, வரும் குறுஞ் செய்திகளுக்கு என்ன பதிலளிக்கலாம் எனப் பரிசீலிக் கும் எனக் கூறப்படுகிறது.

சமீபத்தில் கூகுளின் இன்கொங்கனீட்டோ (incognito mode) பக்கத்திலும், பயனாளர்களின் செயல்பாடுக ளைக் கண்காணித்ததற்காக, கூகுளுக்கு 5 பில்லியன் டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டது. இன்கொங்க னிட்டோ பக்கத்தில் கண்காணிக்கப்படமாட்டோம் – எனத் தவறான பிம்பத்தை மக்களிடையே உருவாக்கி ஏமாற்றியதாக குற்றம் சாட்டப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (04)

# வட கொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை!



இந்த மாதத்தில் மூன்றாவது முறையாக வட கொரியா ஏவுகணைகளை வீசி மீண்டும் நேற்று சோதனை நடத்தியுள்ளது.

இது குறித்து தென் கொரிய முப்படை தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வட கொரியா தனது தெற்கு கடலோரப் பகுதிகளில் இருந்து ஒன்றுக்கு மேற்பட்ட ஏவுகணைகளை விசி செவ்வாய்க்கிழமை சோதித்துப் பார்த்தது. கடல் பகுதி யில் வீசப்பட்ட ஏவுகணைகளின் ரகங்கள் உள்ளிட்ட கூடுதல் விவரங்களை சேகரித்து வருகிறோம், என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1950-53 காலகட்டக் கொரியப் போருக்குப் பிறகு அமெரிக்காவும், தென் கொரியாவும் இணைந்து அவ்வப்போது கூட்டு ராணுவப் பயிற்சிகளை மேற் கொண்டு வருகின்றன. இது, தங்களது நாட்டின் மீது போர் தொடுப்பதற்கான ஒத்திகை என்று வட கொரியா கருதுகிறது. அத்தகைய பயிற்சிகள் நடந்தால் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் வட கொரியா ஏவுகணைகளை வீசி சோதித்து வருகிறது. (04)

# விவசாய உற்பத்திகளை அதிகரிக்கும் நிகழ்ச்சி கிழக்கு மாகாண ஆளுநர் ஆரம்பித்து வைத்தார்



(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாணத்தின் விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கு விவசாயத்தில் நவீன தொழிநுட்பம் குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

விவசாய அமைச்சு இணைந்து செயற்படுத்திய இந்த நிகழ்வில் இயற்கை விவசாய விஞ்ஞானி ஸ்ரீ.பாமயன், இயற்கை விவசாய ஆலோசகர் ஸ்ரீராஜா கணேஷ் ஆகியோருடன் இணைந்து விவசாயிகளுக்கு அவர்களின் விளைச்சலை அதிகரிக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டன.



# இராஜாங்க அமைச்சராக ஷீந்திர ராஜபக்ச நியமனம்

(கற்பிட்டி செய்தியாளர் சியாஜ்)

நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சராக ஷீந்திர ராஜபக்ச, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

அண்மையில் விபத்தில் உயிரிழந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவிற்குப் பதிலாக தற்போது அந்தப் பதவி ஷீந்திர ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண ஆளுநர் அம்பாறைக்கு விஜயம்




(எஸ்.என்.தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை டென்னிஸ் சங்கம் மற்றும் அம்பாறை பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க அம்பாறை மாவட்டத்தில் விளை யாட்டுத் துறையை மேம்படுத்தும் நோக்கில் டென்னிஸ் மைதானத்திற்கான நிர்மாணப்பணியை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம் பித்து வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் வீரசிங்க மற்றும் அம்பாறை பிரதி பொலிஸ் மா அதிபர் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர். இதன் போது மாணவர் களுக்கு பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# நீலையூர் சுதாவின் “கொத்துவேலி” கவிதை நூல் 7 ஆம் திகதி வெளியீடு




(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நீலை யூர் சுதாவின் “கொத்து வேலி'' கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 7 ஆம் திகதி திருகோணமலை நகராட்சி மன்ற மண்டபத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

எழுத்தாளரும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளருமாகிய ச.நவநீதன் தலைமையில் இந்த வெளியீட்டு விழா இடம்பெறவுள்ளது.

# கிழக்கு மாகாண கராத்தே சம்மேளனத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான முதலாவது அமர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண கராத்தே சம்மேளனத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான முதலாவது ஒன்றுகூடலும், இந்த வருடத்தில் அமுல் படுத்தப்படவுள்ள செயல் திட்டங்களை ஆராய்வு சம்பந்தமான செயலமர்வும் மட்டக்களப்பு கல்லடியிலுள்ள தனியார் விடுதியில் கடந்த 29 ஆம் திகதி நடைபெற்றன.

கிழக்கு மாகாண ஸ்ரீலங்கா கராத்தே சம்மேளனத்தின் தலைவர் முகம்மத் இக்பால் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாணத்தின் நிருவாக சபை, பொதுச்சபை உறுப்பினர்கள் மற்றும் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# வாரத்தில் நான்கு நாட்கள் மட்டுமே வேலைத் திட்டம் ஜேர்மனியில் 6 மாதங்களுக்கு சோதனை நடைமுறை




உலகில் பல வளர்ந்த நாடுகள் குறைவான வேலை நேரத்தைக் கடைபிடிக்கின்றன. பெல்ஜியம், நெதர்லாந்து, டென்மார்க், அவுஸ்திரேலியா, ஜப்பான், ஸ்பெயின், பிரிட்டன் போன்ற நாடுகளில் குறைந்த வேலை நேரங்கள் பரவலாக கடைபிடிக்கப்படுகின்றன. இந்தப் பட்டியலில் தற்போது ஜேர்மனியும் இணைந்துள்ளது.

ஜேர்மனி பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள புதிய சோதனை முயற்சியை மேற்கொள்ளவிருக்கிறது. நாளை - பெப்ரவரி முதலாம் திகதி முதல், வாரத்தில் நான்கு நாள்கள் மட்டுமே வேலை என்ற திட்டம் நடைமுறைக்கு வருகிறது.

வாரத்தில் மூன்று நாள்கள் விடுமுறையும், நான்கு நாள்களுக்கு வேலையும் செய்வதன் மூலம் பணியாளர்களின் உடல் மற்றும் மனநிலை ஆரோக்கியமடைவதோடு அவர்களது செயல்திறனும் அதிகரிக்கும் என ஜேர்மனி எதிர்பார்க்கிறது.

பல தொழிலாளர் சங்கங்கள் இந்த 4 நாள்கள் வேலையை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என வாதித்து வந்தன. இந்நிலையில் அமலுக்கு வரவிருக்கும் இந்த சோதனை நடைமுறை, நல்ல பிரதிபலன்களை அளிக்கும் என தொழிற்சங்கங்களும் அரசும் எதிர்பார்க்கின்றன. இந்த சோதனையில் ஜேர்மனியின் 45 நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

வாரத்தில் 5 அல்லது 6 நாள்கள் வேலை செய்வதை விட, வாரத்தில் 4 நாள்கள் மட்டும் வேலை செய்வது ஒரு நிறுவனத்தின் உற்பத்தித் திறனை அதிகரித்து பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் என ஜெர்மனி எதிர்பார்க்கிறது. இந்த சோதனை அடுத்த ஆறு மாதங்களுக்கு ஜேர்மனியில் மேற்கொள்ளப்படுகிறது.

உற்பத்தித் திறனை அதிகரிப்பதன்மூலம் ஜேர்மனியில் நிலவும் குறைந்த பணியாளர்கள் பிரச்சினையும் தீர்வுக்கு வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதேவேளை, தப்போது பெல்ஜியத்தில் வாரத்திற்கு நான்கு நாள்கள் மட்டுமே மக்கள் வேலை செய்கிறார்கள். அதாவது, வாரத்தில் 40 மணிநேரம் வேலை. நெதர்லாந்தில் வாரத்திற்கு 29 மணிநேரம் மட்டுமே மக்கள் வேலை செய்கிறார்கள். வாரத்தில் நான்கு நாள்கள் மட்டுமே அவர்களுக்கு வேலை. இந்த நடைமுறைகள் நல்ல பலன்களை அளிப்பதாக பல நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. (04)

# தென்னமெரிக்க கண்டத்தின் உயர் சிகரத்தில் ஏறி சிக்கிம்மைச் சேர்ந்த மணிதா பிரதான் சாதனை!

இந்தியாவின் சிக்கிம் மாநிலத்தைச் சேர்ந்த 38 வயதான மணிதா பிரதான், தென்னமெரிக்க கண்டத்தின் உயரிய சிகரமான அகோன்காகுவாவில் ஏறி சாதனை படைத்துள்ளார்.

ஆஜெண்டினாவில் உள்ள ஆண்டிஸ் மலைத் தொடரில் அமைந்திருக்கும் இந்த சிகரத்தின் உச்சியை திங்கட்கிழமை அவர் அடைந்தார்.

இந்த சிகரத்தின் உயரம் 6,962 மீற்றர். மணிதாவின் இலக்கான ஏழு சிகரங்கள் வரிசையில் இது நான்காவது சிகரமாகும். ஒவ்வொரு கண்டத்திலும் உள்ள மிக உயரிய சிகரங்களை ஏறுவது அவரது திட்டம்.

இதற்கு முன்னர் 2021 இல் எவரெஸ்ட் சிகரம், 2022 இல் எல்பிரஸ் சிகரம், அதே ஆண்டில் கிளிமஞ்சாரோ சிகரம் ஆகியவற்றில் ஏறி அவர் சாதனை படைத்தார்.

சிக்கிம் முதல்வருக்கும் சோரெங் பகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆதித்யா கோலே தமாங் ஆகியோரின் ஆதரவு மற்றும் ஊக்கத்துக்கும் பிரதான் நன்றி தெரிவித்துள்ளார்.

ஆதித்யா கோலே தமாங் தனது பேஸ்புக்கில் மணிதாவுக்கு வாழ்த்துத் தெரிவித்து பதிவிட்டுள்ளார். அதில், "வாழ்த்துகள் மணிதா பிரதன். எங்களையும் உலகத்தையும் நீங்கள் வியப்பில் ஆழ்த்த தவறுவதே இல்லை" எனத் தெரிவித்துள்ளார். (04)








## இலங்கை கிரிக்கெட் சபை நடுவர் தரம் மூன்றுக்கு உயர்வு பெற்றார் சுஹூட்



(ஹஸ்பர் ஏ.எச்)

சரா பனல் என்று அழைக்கப்படும் இலங்கை கிரிக்கெட் நடுவர் தரம் மூன்றிற்கான தரமுயர்வு பரீட்சை, நேர்முகத்தேர்வு மற்றும் உடற்தகுதி சோதனை போன்றன கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை கொழும்பு நாலந்தா கல்லூரி மற்றும் கெத்தாராம ஆர் பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஆகிய இடங்களில் இடம்பெற்றிருந்தன.

இத்தெரிவிற்காக இலங்கை கிரிக்கெட் தரம் நான்கில் அங்கம் வகிக்கும் 162 நடுவர்கள் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. மிகவும் போட்டியான மேற்படி சரா பனல் நடுவர்கள் தெரிவிற்கு இலங்கை கிரிகட் சபையானது தேசிய ரீதியாக 25 நடுவர்களை மாத்திரம் மட்டுப்படுத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அதற்கு அமைவாக திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினூடாக மேற்படி தரமுயர்வில் பங்குபற்றிய சிஹான் சுஹூட், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ரீதியில் முதல் இடத்தினையும், தேசிய ரீதியில் நான்காவது இடத்தினையும் தக்கவைத்ததன் மூலம் திருகோணமலை மாவட்ட கிரிக்கெட்டிற்கு பெருமை சேர்த்தது மட்டுமல்லாது திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் வரலாற்றில் முதலாவது சரா பனல் நடுவர் என்ற வரலாற்று ரீதியான சாதனையையும் படைத்துள்ளார். தற்போது இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபையின் தரம் இரண்டின் நடுவராக கடமையாற்றும் சிஹான் சுஹூட் இங்கிலாந்தின் சஸ்ஸெக்ஸ் பிராந்திய லீக்கின் முதல்தர நடுவருமாவார்.

மூதூர் மத்திய கல்லூரி, திருகோணமலை இ.கி.ச இந்துக்கல்லூரி மற்றும் மாவனல்ல சாஹிறா கல்லூரிகளின் பழைய மாணவரான சிஹான் சுஹூட், மூதூர் வெஸ்டன் வோறியஸ் அணியின் தலைவரும், திருகோணமலை நடுவர்கள் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினரும், மூதூர் யூ.டி.பி.எம் அமைப்பின் நடுவர் பயிற்றுவிப்பாளரும் ஆவார்.

## நிந்தவூர் உணவகங்களில் திடீர்ப் பரிசோதனை



(நூருல் ஹூதா உமர்)

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுகளிற்குட்பட்ட உணவகங்கள் மற்றும் கிழங்குக்கடைகள் (டேஸ்ட்) கடைகளில் திடீர் சோதனை முன்னெடுக்கப்பட்டது.

இந்நடவடிக்கையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் கே.எல்.எம் றயீஸின் வழிகாட்டலில் மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் எம்.எம்.எம். பைசால் , பொதுச் சுகாதார பரிசோதகர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் டெங்கு களத்தடுப்பு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இதில் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுகள், உணவுகளை கையாளுவதற்கு பொருத்தமற்ற உபகரணங்கள் மற்றும் பழைய எண்ணெய்கள் என்பன கைப்பற்றப்பட்டன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.01.2024 இல் வெளியிடப்பெற்றது.